ഉത്തര രാമായണം

KARIKAL : : VALAVAN

A CHOLA HERO

BY

T. C. PARTHASARTHI IYENGAR,

LECTURER IN TAMIL, CHRISTIAN COLLEGE, MADRAS.

K. PALANIANDI PILLAI & CO.,
PUBLISHERS,
Triplicane, Madras, S. E.

d] [Price As. 5

கரிகால் வளவன்

கிரித்தவ கலாசாலை தமிழாசிரியர்

T. C. பார்த்தசாரதி அய்யங்கார்

எழுதியது.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

[விலை அணா 5

நான்முகம்

இஃது ஓர் ஆராய்ச்சி வாயிலாக வந்த சரிதமாகும். இது ஒரு சிறந்த பழைய சோழவரச சிகாமணியின் திறமையைப் புலப்படுத்துவது; பண்டைக் காலத்துத் தமிழ்ச் சரிதங்களை ஆதாரமாகக் கொண்டது. இது பள்ளிச் சிறுர்களுக்கென்றே எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டுள்ளது. இது படிக்கும் மாணவர்களுக்குப் பண்டைய வரசரின் தீரச் செய்கைகளைச் செவ்வையாய் உணர்த்தி, நல்லறிவு புகட்டக்கூடியது. இதனைக் கல்விக்கழகங்களில் பாட புத்தகமாக வைத்து ஆதரிக்க அறிஞர்களை வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

T. C. P. Sarathy.

Karikal Valavan (A Chola hero)

உ

கடவுள் துணை

கரிகால் வளவன்

நாம் வாசம் செய்யும் தேயத்திற்கு இந்தியா வென்று பெயர். அதில், சோழநாடு தென்பாகத்தில் இருக்கின்றது. அது ஒரு காலத்தில் எல்லா நாட்டினுள்ளும் சிறந்து இருந்தது. அதனிடையில் காவிரியாறு ஒடுகிறது. அந்நாட்டை ஆண்டு வந்தவர்கள் சோழர்கள். அவர்களைத் தமிழ் வேந்தர் மூவருள் ஒருவர் என்று கூறுவார்கள். சோழர்கள் என்பது குடியைப்பற்றி வந்த பெயரென்றே கூறலாம். அவர்கள் ஆண்ட நாட்டிற்கு இராஜதானியாக இருந்தது உறையூராகும். அவ்வூருக்குக் கோழி நகர் என்னும் மற்றொரு பெயருண்டு. அதிலிருந்து, இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் சேட் சென்னி என்னும் பெயர் வாய்ந்த சோழ அரசன் ஆண்டுவந்தான். அவன் மிக்க நற்குண முடையவன். அவ்வரசனுக்கு ஒரு இளைய தம்பி இருந்தான். அவன் பெயர் இளையோன் என்றும் இளஞ்சேட் சென்னி என்றும் சொல்லுவர். அவன் நிரம்பவும் சாமர்த்தியவான். அறஞ்

செய்வதில் ஆவலுடையவன்; அவன் சிறு வயதில் தனக்குச் சமானமானவர்களை எல்லாம் தன்னோடு சேர்த்துக்கொண்டான். பிறகு அவர்களுக்கு உயுத்தம் செய்யும் வழிகளைச் சொல்லிக் கொடுத்தான். அச்சிறுவர்களும் கொஞ்ச நாளைக்குள் மிக்க திறமைசாலியாகி விட்டார்கள். அவர்களை இளஞ்சேட் சென்னி பிரதிதினம் காலை மாலை இரண்டு வேளைகளிலும் வெளியில் அழைத்துப் போவான். அங்கு அவர்களை இடசாரி வலசாரியாக வரும்படிச் சொல்லுவான். வெளியில் உள்ளவர்கள் கண்டு பயப்படும்படியாக அவர்களைச் சண்டைபோடச் சொல்லுவான். இவ்வாறு பலரைப் பழக்கி உயுத்தம் எவ்விடத்தில் நேருமோ வென்று எதிர் பார்த்து இருந்தான். இவனுடைய போர்த் திறமையைக் கேட்டு, பலவரசர்கள் பயந்து இருந்தார்கள். இவனது அண்ணன் பகைவர்கள் திகிலடைந்து இளஞ்சேட் சென்னி எப்போது தங்கள்மீது படை எடுத்து வந்துவிடுகிருனே! என்று தாங்கள் செலுத்தவேண்டிய பகுதியைக் குறித்த நாட்கள் வருவதன் முன்னரே செலுத்தி விடுவார்கள்.

அந்த இளஞ்சேட் சென்னி தன்னைச் சூழ்ந்த படை வீரர்களிடம் மிக்க அன்புடன், அவர்களை விட்டுப் பிரியாமல் இருந்தான். அவர்களும் அவனிடம் மரியாதையாய் இருந்தார்கள். அவ்

விளஞ்சேட் சென்னி ஒரு கணமாயினும் சும்மா யிருப்பதில்லை. அவ்விளவீரன் உண்ணும்பொழுதும் உறங்கும்பொழுதுங் கூட உயுத்தத்தைப் பற்றித் தானே பேசிக்கொள்ளுவான், அவன் ஒவ்வொரு நாளும் படுக்கையை விட்டு எழுந்தவுடனே தனது நண்பர்களைக் கூப்பிட்டு, அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களைக் கொடுத்துவிட்டுத் தான் பல்துலக்கப் போவான். அவன் இளமைப் பருவத்தில் அடைந்திருந்த தைரியம், வித்தை, இவைகளைப் புகழாதவர்கள் இல்லை. அவ்வூரில் இருப்பவர்கள் எல்லாம் அந்த இளஞ்சேட் சென்னியின்மீது மிக்க பிரீதிபாராட்டி வந்தார்கள். அவனும் அவர்கள்மேல் பக்ஷம்வைத்திருந்தான். அவ்விளையோன் ஒரு நாள் தனது படையைத் திரட்டிக்கொண்டு வேடிக்கையாக வெளியில் புறப்பட்டான். அன்று அப்படையின் வனப்பைக் கண்டவர்களாகிய அந்நகர மக்கள் எல்லாம் ஒன்றுய்க கூடி, அவ்விளஞ்சேட் சென்னியின் திறமையை மெச்சி உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி என்று அவனைப் பட்டப் பெயர் கொடுத்து அழைத்தார்கள்.

சேட்சென்னியோ தம்பியின் பலத்தால் பகைவர் பயம் நீங்கி, சுகமாக இராஜ்யாதிகாரஞ் செலுத்தி வந்தான். இளஞ்சேட் சென்னி வெகுநாள் வரையில் இளவரசாக விருந்தான். மூத்தவனுக்கு

முன்னமே கலியாணம் ஆயிற்று. பின்பு சில நாள் கழித்து இளையவனாகிய இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேளாளர் வீட்டுப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். அந்தப் பெண் ஒரு தமிழ்ப் புலவரின் தங்கையாகும். அப்புலவர் பெயர் இரும்பிடர்த் தலையார் என்று சொல்லுவார்கள். மூத்தவனான சேட் சென்னியோ அரசாட்சியைப்பற்றிச் சிறிதுங் கவனிப்பதேயில்லை. அதிகாரத்தை எல்லாம் தன் தம்பியாகிய இளஞ்சென்னியின் வசம் விட்டுவிட்டான். ஆயினும், அவ்விருவருக்குள் ஒருவிதமான மனவேறுபாடும் சில நாள் வரையில் இல்லாமலேஇருந்தது. அவர்கள் இருவரும் நகமும் சதையும் போலிருந்தனர். அவ்விருவர்களுக்குள் வேற்றுமை உண்டென்பதை ஒருவரும் உணர முடியாமலிருந்தது. தம்பிதான் சகல அதிகாரங்களையும் அண்ணனுக்குப் பதிலாகச் செலுத்தி வந்தான். அதன் பின்பு இளையவன் தங்களுக்குச் சொந்தமான விளை நிலங்களைச் செவ்வனே பயிர்செய்யும்படித் தன் அரசாட்சியின்கீழ்ப் பட்ட குடிகளுக்குக் கொடுத்தான். அக்குடிகளால் அரசாட்சிக்குக் கொடுக்கவேண்டி வருகிற பகுதியை ஒரு பைசாவும் குறையாமல் வசூலிப்பான். இப்படி உழு தொழில்செய்து வந்தவர்களே வேளிர் என்கிறவர்கள். இவர்கள் தான் பழைய அரசர்களுக்கு நீங்காத் துணையாகியும், சேனைத்தலைவர்

ஆகியும் இருந்தார்கள். இவர்கள் முன்னர் சோழ நாட்டினுள்ளிருக்கிற பிடவூர், அழுந்தூர், நாங்கூர், ஆலஞ்சேரி, பெருஞ்சிக்கல், வல்லம், கிழார் முதலான இடங்களில் வசித்து வந்தார்கள். இவர்கள் வேள், அரசு, காவிதி, முதலிய பட்டம் பெற்றிருந்தவர்கள். இந்த வேளிரைத்தான் அகத்திய முனிவர் துவாரகை சென்றிருந்தபோது, தன்னுடன் தமிழ் நாட்டில் கொண்டுவந்து குடி ஏற்றப் பட்டவர் என்பர். இவ்வேளிர்கள் முன்னந் துவாரகையை அரசாண்ட கண்ணபிரானது மரபைச் சேர்ந்தவராம். அதனால்தான் சோழ மன்னர்கள் ஒருவித வித்தியாசமும் பாராட்டாமல் அவ்வேளாளர் வீட்டுப் பெண்ணைக் கலியாணஞ் செய்து கொண்டார்கள்.

இளஞ்சேட் சென்னியின் மனைவியாகிய அழுந்தூர் வேளாளப் பெண்ணே மிகவும் அழகுடையவள். கற்பிற்கு ஆபரணமாக இருந்தவள். அவள் தன் கணவன் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்குந் தன்மையுடையவள். இப்படிக் காதலனுங் காதலியும் எண்ணம் மாறுபடாமல் சுகமாக மனை வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். சில நாள் சென்ற பிறகு அவ்வழுந்தூர் வேளாண் மகள் கருப்பமாய் இருந்தாள். அது தெரிந்த இளஞ்சேட் சென்னி மிகவும் சந்தோஷத்துடன் இருந்தான். அவன் அல்லும் பகலும் சொக்கர்

பிரானையே இடைவிடாமல் சிந்தித்துத் தனக்கு நல்ல குமாரனை அளிக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுவான். தன் தமையனுக்கும் ஆண் குழந்தைகள் இல்லையே என்று அகம் குழைவான். இவ்வாறு இருக்கும்போது சேட்சென்னியின் மனைவியும் கருப்பமாய் இருப்பதாகத் தெரிந்துகொண்டான். பின்னர் பெரு மகிழ்ச்சி அடைந்தான். இரண்டு அரசர்களின் மனைவியர்களுக்கும் பிரசவ காலம் சமீபித்தது.

அப்போது அரசன் மாளிகையை நோக்கி ஒரு பெரியவர் தானுகவே வந்தார். அவரை அவ்விரண்டு மன்னர்களும் அடிவணங்கிப் போற்றினார்கள். அவர், அவர்கள் செய்த மரியாதைக்கு மனம் மகிழ்ந்தார். அவர், அவ்விரு மன்னரையும் பார்த்து, உங்களுக்கென்ன வேண்டும்; எத்தகைமையான வரம் வேண்டினுங் கொடுக்கத் தடையில்லை, உங்கள் குலப் பெருமை அளவிட முடியாதது, உங்கள் முன்னோர்கள் சத்தியந் தவறாதவர்கள், மகா தெய்வபக்தி யுடையவர்கள்; சிறந்த வீரர்கள், தமிழைத் தலை கொடுத்துங் காக்கும் இயல்பு உடையவர்கள், அவர்களைப் போற்றாத அரசர்களும் புலவர்களும் பூவுலகத்திலில்லை. அவர்களே பல கோவில், குளம், சாலை, ஆகிய முதலிய இவை செய்து சிறந்து இருந்தார்கள். முன்னம் இச்சோழநாடு தொண்டை நாட்டில்

பிறந்த கல்விமான்களைப் பட்டினி இல்லாமல் காப்பாற்றி வந்தது. அக்குலத்தில் பிறந்த உங்களுக்கு ஒருபோதும் குறையுண்டாகாது என்று சொன்னார்.

அப்பெரியாரின் அமுத வசனத்தைக் கேட்ட சோழ மன்னர்கள் இருவரும் முன்னினும் மிக்க சந்தோஷம் அடைந்தனர். உடனே அப்பெரியவர் அம்மன்னர்களின் உள்ளக் கருத்தைக் குறிப்பால் தெரிந்து, அரசர்காள்! நீவிர் எண்ணியிருக்கும் எண்ணத்தைத் தெரிந்துகொண்டேன். அதைக் குறித்துக் கவலையுறல் வேண்டாம். இன்றையதினம் சூரியன் மேற்கடல் சென்று ஒளிக்கும் முன்னமே நும்மிருவருக்கும் இரண்டு ஆண் மகவு பிறக்கும். ஆனால், ஒரு விசேடமுண்டு. இன்றையதினம் பிறக்கப்போகும் குழந்தைகள் நாளை பிறக்குமாயின் நன்மையுண்டு. நாளை பிறக்குங் குழந்தையே இச்சோழ நாட்டை ஆளும் அரசனுவான். அக்குழந்தையை உலகில் யாவரும் போற்றுவார்கள். அதுவே இவ்வுலகிலுள்ள அரசர்களை அடிபணியச் செய்யும். அதுவே சோழ குலம் அழியாமல் வாழையடி வாழையாக வளர்ந்து வரவும் செய்யும் என்று கூறினார்.

அவர் வார்த்தையைக் கேட்ட அரசர்கள் இருவரும் ஒரு மனதுடையர்போல அவரைப்பார்த்து, ஐயா! நீர் கூறிய வார்த்தையைக் கேட்டு

மகிழ்ச்சி பெற்றோம். எங்களுக்கு இந்நாட்டை ஆளும்படியான ஒரு ஆண் மகவுதான் வேண்டும். அக்குழந்தை, எங்கள் இருவர்களில் எவருக்குப் பிறந்தாலும் சம்மதிதான். எங்களுள் இளையன் மகன் அரசு ஆளக்கூடாது, மூத்தவன் மகன்தான் அரசு ஆளவேண்டும் என்கிற வித்தியாசம் இல்லை. எங்களில் எவருக்குப் பிறந்தாலும் இச்சோழர்களின் பெயரைச் சொல்லும் திறமையை உடையதாக இருக்கவேண்டும். அப்படி நீர் கூறிய சுபமுகூர்த்தத்தில் பிறக்கும் பிள்ளையே எங்கள் இருவருடைய பாகத்தையும் ஆண்டு அநுபவிக்கட்டும் என்றனர்.

அச்சொற் கேட்ட பெரியவர் சொல்லமுடியாத ஆனந்தம் அடைந்து, "உங்கள் எண்ணம் சுபமாகுக" என்று ஆசீர்வதித்துப் போயினர்.

அவர் போனவுடனே இளையவன் மனைவி பிரசவ வேதனை அடைந்தாள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவளுடைய வேதனை சிறிது சிறிதாகக் குறைந்துக் கொண்டே வந்தது. அன்று அவ்வழூந்தூர் வேளாளப் பெண் பிரசவிக்கவில்லை. அதற்குள் சேட்சென்னியின் மனைவி பிரசவ வேதனைபடத் தொடங்கி, ஒரு ஆண் மகவைப் பெற்றாள். அதைக்கேட்ட மூத்தோன் மனம் கவலை யடைந்தது. அவன் தானடைந்திருக்கும் துயரைப் பிறருடன் சொல்லவில்லை. தனக்கு

மகன் பிறந்ததைப் பற்றிக் கொண்டாடவும் இல்லை. ஒன்றையும் காதிற் போட்டுக்கொள்ளாமல் சும்மா யிருந்தான்.

மறுநாள் பொழுது விடிந்தது. முன்போலவே இளையோன் மனைவி பிரசவ வேதனையால் வருந்தத் தொடங்கினுள். பிறகு அப்பெரியார் கூறிப் போன நல்ல வேளை வந்தது. அப்போது தெய்வ சங்கல்பத்தால் இளஞ்சேட் சென்னி முன்னம் பண்ணிய புண்ணியமே ஒரு அழகிய வடிவு எடுத்து வருவது போல ஒரு ஆண் மகவை அவ் வேளாளப் பெண் பெற்ருள். அக்குழந்தை மகா விஷ்ணுவைப் போல பிரகாசமும், மார்பில் அழகிய புள்ளியும் உடையதாய் இருந்தது. அதைக் கண்டவர்கள் எல்லாம் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தார்கள்.

அக் குழந்தை தான் பின்னர் கரிகாலன் என்று யாவருங் கொண்டாடியது. அது இளஞ் சந்திரனைப்போல நாளுக்கு நாள் வளர்ந்து வரலாயிற்று. அக்குழந்தையின் இளம் பருவத்தைக் கண்ட தாய் தந்தையரும் புதிது புதிதான சந்தோஷத்தை அடைந்துகொண்டே வந்தார்கள்.

இப்படி இருக்கும்போது, மூத்தோன் அந்தக் குழந்தையின்மீது பொருமை அடைந்தான். அவன் அதைப் பிறர் ஒருவருக்குந் தெரிவிக்கவில்லை, வெளிக்குங் காட்டவில்லை. தன் தம்பி

யாகிய இளஞ்சேட் சென்னிக்குத் தெரிந்தால் தனக்கு என்ன துன்பம் நேரிட்டு விடுமோ வென்று காலத்தை எதிர்பார்த்திருந்தான். அக் குழந்தையோ மிக்க சிறப்புடன் வளர்ந்து வந் தது. அதைக் காணும்போதெல்லாம் சேட் சென்னிக்குப் பொருமை அதிகரித்துக் கொ ண்டே வந்தது. பிறகு அவன் தருமத்திற்கு விரோதமாய்ப் பொருமைக்காரனுன மந்திரியால் மதிகலக்கப்பட்டு, ஆசைக்காரனுகிய கூற்றுவன் வாய்ப்பட்டான். அதன் பின்பு அக்குழந்தை யைக் கொல்லப் பலவிதமான சூழ்ச்சி செய்யத் தொடங்கினுன்.

அதைத் தெரிந்த இரும்பிடர்த் தலையார், ஒன்றுந் தோன்ருதவராய், எப்போதும் தன்னு டைய தங்கையையும் இளஞ்சேட் சென்னியை யும் அக்குழந்தையையும் வெகு சாக்கிரதையாகக் காவல் செய்து வந்தார்.

இவ்வாறு இருக்கையில், ஒரு நாள் இரும் பிடர்த் தலையார் ஏதோ காரியத்திற்காக ஒருவரிட மும் சொல்லாமல் வெளிப் போந்தார். அச்சந்தர்ப் பத்தில் சேட் சென்னி ஒருவருக்கும் தெரியாமல் தனது தம்பியின் வீட்டில் நெருப்பை வைத்து விட்டான்.

இரும்பிடர்த் தலையர் திரும்பிவந்துபார்க்கும் போது, தமது தங்கையின் வீடு எரிந்துகொண்

டிருந்தது. அதைக் கண்டு அவர் மனம் பதை பதைத்தது. கண்களில் தண்ணீர் தாஞகவே பெருகத் தொடங்கியது. அப்போது அவர் தன்னை மறந்து சாரணச் சிறுவர்போல எரிகின்ற நெருப்பின் இடையில் நுழைந்து உள்ளே புகுந்து பார்த்தார். அங்குத் தன்னுடைய தங்கையும் இளஞ் சேட்சென்னியும் சாம்பலாய் விட்டதைக் கண்டார். உடனே, பக்கத்தில் குழந்தை துள்ளித் துடித்துக் கொண்டிருந்ததைக்கண்டு, அதை வாரி எடுத்துக்கொண்டு மிகவும் பிரயாசத்துடன் வெளியே வந்தார்.

அதைக் கண்ட துஷ்டர்கள் அக்குழந்தையை அவரிடமிருந்து பிடுங்கிச் சிறைப்படுத்தினர். அத்தீயர்களின் கெட்ட எண்ணத்தை அறிந்த புலவர், இனி இவர்களை வஞ்சனையாகத்தான் வெல்லவேண்டுமென்று எண்ணி அச்சமயம் சும்மா இருந்துவிட்டார். ஆயினும், அவருக்குத் தன் மருமான்மீது இருந்த அன்பு மிக்க வருத்தியது. எவ்வாருயினும் அக்குழந்தைக்கு ஆபத்து வராமல் காக்கவேண்டுமென்று அவர் பலவிதமான உபாயங்களைத் தேடி அலைந்தார். செங்கோலுக்கு முன்பு சங்கீதமா என்பதுபோல அவரது முயற்சி பயன்படாமல் இருந்தது. கடைசியாக அவர் சிறைகாவல் செய்கிறவர்களைத் தன் வசப் படுத்திக்கொண்டார். அதன் பிறகு, அவர் அக்

காவலரின் உதவியால் ஒருவருக்குந் தெரியாமல் தினம் அச்சிறையுள் சென்று தன் மருமானுக்குப் பலவிதமான கல்விகளையும் போதித்து வந்தார். அப்பாலகனுக்கும் முன் பிறப்பில் தேடி வைத்த செல்வம்போல், ஒருதரம் சொல்லிக் கொடுப்பதற்கு முன்னமே கல்வி பெருகத் தொடங்கியது.

இப்படிச் சிறை வாசத்தில் இருக்கும் குழந்தைக்குத் தக்க வயது வந்தது. அப்போதே தைரிய இலக்குமியும் அவ்வாலிபனிடம் வந்து குடி புகுந்தாள். அவ்வாலிபன் ஒருநாள் தன் நிலைமையை ஆலோசித்துப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பிறகு அச்சிறியன் எங்ஙனமாயினும் இச்சிறையினின்றுந் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று நினைந்து, அச்சிறையின் கதவினைப் பிளந்துகொண்டு வெளியில் வந்தான். அப்போது சிறைக்காவலர் நிற்பதைக் கண்டு மனந் தாளாதவனாய்த் தனது கோபமிகுதியால், அத்தீய காவலர் வைத்திருந்த வாளைப் பிடுங்கி, அவர்களை அவ்வாளுக்கு இரை கொடுத்து ஓடி விட்டான்.

அச் செய்தியைத் தூதர் மூலமாய்த் தெரிந்த சேட்சென்னி, உடனே காவலரை விட்டு அவ்வாலிபனைக் கொண்டுவரச் சொன்னான். அவ்வாறே தூதர்கள் தேட ஆரம்பித்தார்கள்.

சிறையிலிருந்து தப்பித்து ஓடிய வாலிபன், தான் மறைந்து வசிக்க பல இடங்களுக்குச் சென்று பார்த்தான். அவனுக்கு ஒரு இடமுஞ் சரிப்படவில்லை. அந் நாட்டில் வசிக்கவும் மனம் ஒப்பவில்லை. இவ்விதம் அவ்வாலிபன் எண்ணி எண்ணிக் கடைசியில் சேரநாட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். அங்குத் தன்னைப் பிறர் தெரிந்து கொள்ளாதவாறு வசிக்கத் தொடங்கினன். அவ் வாலிபன் வசித்து வந்த நகரந்தான் சேர அரசன் இராஜதானி. அதற்குக் கருவூர் என்று பெயர். இப்படி அச்சிறியன் சிலகாலம் வசித்து வருகையில், அவனுக்குப் பகைவனை பெரிய தகப்பன் இறந்து விட்டான்.

அவ்வாறு இறந்த சேட்சென்னிக்கு ஒன்பது மைந்தர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒற்றுமை இல்லை. அவர்கள் ஒருவரோடொருவர் எப்பொழுதும் பாகத்தைப்பற்றிச் சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் அரசுரிமை உடையவன் இவன்தான் என்று சொல்ல முடியாமற் போயிற்று. பிறகு சில தினங்கழித்து அண்ணன் தம்பியர் எல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்து தமக்குள் ஒரு சமாதானஞ் செய்துக்கொண்டார்கள். அஃதென்னவெனில், தமது பட்டத்துயானையை அலங்கரித்து விடவேண்டியதென்றும், அது எவனைத் தனது கழுத்தின்மேல்ஏற்றிவருகிறதோ

அவனே அரசுரிமை பெற்றவன் என்றும் தீர் மானஞ் செய்து, கழுமரம் என்னும் ஊரில் கட்டி இருந்த பட்டத்து யானையைக் கொண்டுவந்து அதை நன்ருய் அலங்கரித்து விட்டார்கள். உடனே அந்த யானை மிக்க வேகமாய் மலைபோல நடந்து சேர நாட்டை நோக்கிச்செல்லத் தொடங் கியது. அதைக் கண்ட அவ்வொன்பது பேரும் மனக் கலக்கமடைந்து வாய்திறக்க வழியில் லாமல் இருந்தனர். யானையோ போய்க்கொண்டே யிருந்தது. அந்த யானையின் தலை மறையும் வரை யில் அவர்கள் பார்த்துக்கொண்டு இருந்து, பிறகு யாரைக் கொண்டுவரப்போகிறதோ என்று கலக் கம் அடைந்து இருந்தார்கள்.

இவ்வாறு ஒருவரோடொருவர் கலங்கிக் கொண்டிருக்கும்போது, மதுரைமா நகரை ஆட்சி புரியும் பெரும் பெயர் வழுதி என்னும் பாண்டி யன் இரும்பிடர்த் தலையாரின் வார்த்தைக்கு இணங்கி அங்கு வந்து சேர்ந்தான்.

அவன் வரவைக்கண்ட சேட்சென்னியின் குமாரர்கள் மிக்க சந்தோஷம் அடைந்து, அவ னுக்குத் தக்க மரியாதைகள் செய்தார். அவன் அவர்கள் செய்த மரியாதையை மிக்க பெருமை யாக ஏற்றுக்கொண்டு, அங்கு அமைத்திருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அந்த அரச குமாரர் களும் தத்தமக்கு அமைத்துள்ள ஆசனத்தில்

உட்கார்ந்தார்கள், பிறகு பாண்டியன் ஒன்றும் தெரியாதவன்போல அந்த அரச குமாரர்களைப் பார்த்து, சோழகுல தீபங்களே! "உங்கள் அரசு எவ்வாறு நடை பெறுகிறது?" நும் தந்தையார் இறந்தபின்பு உங்களுள் யாரை அரசுபுரியும்படிச் செய்தீர்கள்? என்றான்.

பாண்டியன் சொற்கேட்ட அவ்வரசிளங் குமாரர்கள் உடனே, அவனைப் பார்த்து, பாண்டிய மன்னா? நாங்கள் ஒன்பதின்மரும் இதுவரையில் ஒருவரோடொருவர் வீணே மனஸ்தாபப் பட்டோம். நேற்றைதான் நாங்கள் ஒருவிதமான முடிவு செய்துக்கொண்டோம். அதன் காரணமாக எங்கள் பட்டத்து யானையை அலங்கரித்து விட்டிருக்கிறோம்; அது எவரைத் தன் முதுகின் மேல் ஏற்றிவருகிறதோ அவனையே இச் சோழ நாட்டிற்கு அரசனுக்கச் சம்மதித்திருக்கிறோம் என்றனர்.

அதுகேட்ட வழுதி கலகலவென்று சிரித்தான். பின்பு அவர்களைப் பார்த்து, அரசிளங் குமரர்காள்! உங்கள் புத்திக்கு மெச்சினேன் அதில் எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகின்றது. யானையோ விலங்குகளில் ஒன்று, அதற்கு இவன் தான் பட்டத்திற்கு உரிமையுடையவன் என்று எப்படித் தெரியும்? அந்த யானை ஒரு கால் எக்குடி பிறந்தவனை ஆயினும் கொண்டுவந்தால்,

அவனை நீங்கள் அரசனுக்கச் சம்மதிப்பீர்களா? அவன் சோழ இராஜ்யத்திற்குச் சரியான அரச னுவானு? என்ன, இளம் பிள்ளை பயமறியாது என் னும் பழமொழிபோல் செய்தீர்களே! என்ருன்.

அதற்கு, அவ்வொன்பதின்மரும் ஒன்ருய்ச் சேர்ந்து, பாண்டிய மன்னரே! அந்த யானையின் பெருமையை நீர் அறிய மாட்டீர். அவ்வியானை யின் இலக்கணத்தைக் கண்டு ஆச்சரியம் அடை யாதவர்கள் ஒருவரும் இல்லை. அந்த யானை எவ் விதம் செய்தாலும் எங்களுக்குச் சம்மதிதான். அது ஒருபோதும் இச்சோழ நாட்டிற்குச் சம் பந்த மில்லாதவர்களிடம் செல்லாது. அதில் தமக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டாம். என் ருர்கள்.

அவ்வசனத்தைக்கேட்ட பாண்டியன் மிக வும் சந்தோஷத்துடன் இருந்தான். அதற்குள், முன் கழுமரத்தை விட்டுச்சென்ற களிறு சேர நாட் டில் பிறருக்குத் தெரியாமல் வசித்திருந்த கரிகால னைத் தன் கழுத்தின்மேல் ஏற்றிக்கொண்டு யாவருங் காணும்படி உறையூர் வீதியில் வலமாக வந்து அரண்மனைபுகுந்தது. அதைக்கண்ட அவ் வூரார் எல்லாரும் மனமகிழ்ச்சி அடைந்தார்கள். அங்கிருந்த பாண்டியனும் அவ்வாலிபனைப் பரி வுடன் பார்த்தான். இரும்பிடர்த்தலையார் தன்னை மறந்து தனது மருமானைக் கட்டித் தழுவி உள்

ளங் குளிர்ந்தார். சேட்சென்னியின் குமாரர்களின் முகப் பொலிவு அழிந்ததாயினும், அவர்கள் பாண்டியனிடம் கூறிய வார்த்தையிலிருந்து தவறி நடக்க மாட்டாதவராயினர். உடனே யாவரும் ஒன்ருகச் சேர்ந்து அப்பாண்டியன் முன்பே அவனை அரசனுக்கினர்கள். பின்னர், பாண்டியன் அவ்வாலிபனை ஆசீர்வதித்து, இரும்பிடர்த் தலையாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, தன்னகர் மீண்டான்.

அன்று முதல் இரும்பிடர்த் தலையாருக்கு முன்னினும் அதிகமான பற்று மருமகனிடம் ஏற்பட்டது. அவர், தன் மருமானுக்குப் பலவிதமான நீதிகளைச் சொல்லிவந்தார். அவன் ஒருவராலும் அபஜயம் அடையாத பல துணைவரை அவனுக்குச் சேர்த்துக்கொடுத்தார். அக்காலத்தில் எவரெவர்கள் வலிமையுடையவராக இருந்தார்களோ! அவர்களை எல்லாம் தன் மருமானுக்குச் சிநேகஞ் செய்து வைத்தார்.

அதன் பிறகு, அப்புலவர் பெருமான் நாங்கூர் சென்ருர். அங்குச் சிலகாலம் அவ்வூர் வேளாளருடன் பழகினர். பின்பு அவர்களின் திறமை, ஒற்றுமை, சீலம் முதலியவற்றைக் கண்டார். அவர் உடனே அவ்வேளாளர் குடியிற் ருேன்றிய ஒரு அழகிய பெண்ணைத் தன் மருமானுக்கு மணம் பேசினர். பின்பு சிறிது காலந் தாழ்த்துக் கலியா

ணத்தை முடித்துச் சந்தோஷத்தை அடைந்திருந்தார். அந்தப் புதிய சம்பந்தத்தால் உண்டான உறவின் முறையாரோடு, மாமன் கூட்டத்தவர்களான அழுந்தூர்வேளிர்களும் சேர்ந்து அக்கரிகாலனுக்கு ஒரு பெருந் துணைவரானார்கள். அவ்விரு கூட்டத்தினரின் வலிமையால் கரிகாலன் உறையூரை விட்டுக் காவிரிப்பூம் பட்டினத்தை இராஜதானியாக்கிக்கொண்டு, அதிலிருந்து அரசு செய்து வந்தான். அக்கரிகாற் சோழன் அரசாட்சியில் குடிகள் மிகவும் செல்வர்களாக இருந்தார்கள்; அக்காலத்தில் பயம் திக்குகளிலும்இல்லை, தெருக்களிலுமில்லை. அவன் வயதிற்சிறியனாக இருந்தாலும், வலிமையிலும், கொடுக்குந் திறமையிலும், உண்மை பேசுவதிலும், பார பக்ஷமில்லாமையிலும் சிறந்து விளங்கி வந்தான். அவனிடம் காலைமாலை இரண்டு வேளைகளிலும் பல பெரியோர் வருவதுண்டு, அவன் அவரவர் தகுதிக்குத் தக்கவாறு மரியாதை செய்து அனுப்புவான். இவ்விதம் பெரியோர் ஆசீர்வாதத்தைப் பெற்று வந்த அக்கரிகாலனுக்கு மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. அக்கரிகாலன் ஆண் குழந்தைகளுக்கு முறையே சேட்சென்னி-நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான், எனவும், பெண்ணிற்கு ஆதிமந்தியார் என்றும் நாமஞ் சூட்டினன். இங்ஙனம் யாவரு மகிழத் தேவரும்

புகழச் சந்தோஷமாய்ச் சகல போகமுடையவ ணய் இல்லற தருமந் தவருமல் ஒழுகிவந்தான்.

இவ்வாறு செய்துவரும்போது, உள்நாட்டில் சில குழப்பங்கள் நடக்கத் தொடங்கின. ஆயின், அதைப் பிறகு தீர்த்துக் கொள்ளலாம் என்று அவன் அசட்டையாக இருந்தான். அவன் எண்ணமெல்லாம் வெளிநாட்டில் நடந்து வருங் குழப்பத்தை அடக்குவதிலேயே குடி கொண்டி ருந்தன. அதை அறிந்த இரும்பிடர்த்தலையார் தென்றல் முற்றிப் பெருங்காற்ருகிவிடப் போகிற தென்று உணர்ந்து மருமானுக்குச் சில உபதேச மொழிகளைக் கூறி, முதல் உள்நாட்டுக் குழப் பத்தை வேருடன் அறுத்து விடுமாறு கூறினர். அதுகேட்ட அம்மன்னன், அவ்வாறே செய்து முடித்தான்.

பின்னர் சிலநாட்கள் செல்ல, ஒரு நாள் அவன் அரசமண்டபத்திற்கு வந்து நீதிவிசாரணை செய்துக் கொண்டிருந்தான். அப்போது, அவ் வூரில் இருந்த இரண்டு பெரியவர் ஒருவ ரோடொருவர் தாம் கற்ற கல்வியில் வாதம் நேர, அவர்களுக்குள் அபிப்பிராயம் மாறுபட்டு உடனே அவ்விருவர்களும் தமது வழக்கைத் தீர்த்துக் கொள்ள அரச சபைக்கு வந்தார்கள். அங்கு சிம் மாசனத்தில் ஒரு வாலிபன் நீதி செலுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு, இருவரும் தத்தமக்

குள்ளே ஏதோ சந்தேகத்தோடு திரும்பிச் செல்லத் தொடங்கினார்கள்.

அவர்கள் உள்ளக்கருத்தைக் குறிப்பினால் அறிந்த கரிகாலன் திடீரென ஆசனத்திலிருந்து இறங்கி உள்ளே சென்றான். அப்பால், சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விளவீரன் நரைத்த தலையும் தாடியும் எடுத்துக் கட்டிக் கொண்டு தலை அசைய முதிர்ந்தகிழவர் என்று தன்னைக் காண்கிறவர் எண்ணும்படி மாறுவேடம் போட்டு வந்து முன்போலவே ஆசனத்து அமர்ந்தான். உடனே அக்கரிகாலன் தன்னிடம் அபிப்பிராய பேதங்கொண்ட பெரியோர்கள் இருவரையும் கூப்பிடும்படித் தெரிவித்தான். அக்கணமே அவர்கள் இருவரும் அவன் முன்னே வந்து நின்றனர். அப்போது அவர்கள் அரசன் உருவத்தைக் கண்டனர். தாங்கள் முன்பு கண்ட உருவம் இதுவல்லவென்று நிச்சயித்துக்கொண்டு தமது எண்ணத்தையும் வழக்கையும் அரசன் எதிரே எடுத்துக் கூறினார்கள்.

உடனே சோழன் வாதிப் பிரதிவாதி இருவரது அபிப்பிராயங்களையும் சரிவரச் செவி கொடுத்துக் கேட்டான். பிறகு அவர்களை நோக்கி, பெரியோர்களே! உங்கள் வழக்கை அறிந்தேன். வீணே என் ஒருவருடன் ஒருவர் போர்செய்து கொள்ளுகின்றீர்கள்? வேண்டாம், இப்போது

உங்கள் இருவர் வாயினின்றும் வந்த வார்த்தையே போதும். அவ்வசனங்களே உங்களுடைய வார்த்தைக்குச் சரியான சாக்ஷியாயிற்று. வேறு சாக்ஷியம் வேண்டாம். "நுணலுந் தன்வாயால் கெடும்" என்பதுபோலவிருக்கிறது. நீங்கள் கூறிவந்த சொற்களில் இது குணமானது. இது குணமில்லாதது என்பதை அறிந்தேன், என்று பெருஞ்சிரிப்புச் சிறித்தான். உடனே அரசன் அச்சபையோர் காணத் தான் போட்டிருந்த வேடத்தைக் கழற்றி எறிந்து, மறுபடி முன்போலவே காளையாகச் சிம்மாசனத்தில் உட்கார்ந்தான்.

அதைக் கண்ட சபையோர்கள் ஆச்சரியமடைந்தனர். அங்கு வழக்கிற்காக வந்திருந்த பெரியோர்கள் இருவரும் ஒன்றுந் தோன்றுதவர்களாகி, என்ன ஆச்சரியம்! இச்சிறிய வாலிபனு! சற்று முன்பு தீர்ப்புச் சொன்னது. இவனது புத்தி கூர்மையை என்னவென் றெடுத்துறைப்பது! இவனே சோழன்; இவனே மனுநீதி கண்ட சோழன் குலத்துச் சுடர்விளக்கு; புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்ன திறமை! என்ன நடுவு நிலைமை! இவனல்லவா! நீதிவழுவாத அரசன்; இவனல்லவோ சோழவரசர் குலத்தை விளக்கவந்த சிகாமணி; இப்படி அல்லவா பிள்ளை பிறக்கவேண்டும். அதனுல்தான் சோழர்கள் என்றுல் யாவருங் கொண்டாடுகின்றுர்கள்.

சிங்கத்திற்குப் பாய்ச்சலும் மீனிற்கு நீச்சலும் போலச் சோழர் குடியில் பிறந்த குமாரர்களுக்குப் பிறர் கற்பித்துக் கொடுக்கவேண்டிய தர்மம் யாதுளது? "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்னும் பழமொழிக்குச் சரியான பொருள் இக்காளையின் காரியத்தால் தான் அறிந்தோம் என்று ஒருவரோடொருவர் மிக்க ஆச்சரியமாய்ப் பேசிக் கொண்டிருந்தனர்.

கரிகாலன் உள்நாட்டுச் சீர்திருத்தம்

பிறகு சிலநாள் சென்றபின்பு, ஒருநாள் கரிகாலன் தன்னுடைய நாட்டின் நன்மையைக் கோரிச் சிலவற்றைப் புதுப்பிக்க ஆலோசித்தான். தன் இராஜதானியான காவிரிப்பூம் பட்டினத்தில் உள்ள விளை நிலத்தை அவரவர்கள் மனம்போனவாறே அனுபவித்து வந்தார்கள். ஆகையால், அவரவர்கள் அனுபோகத்தில் இருக்கும் நிலத்தின் பரப்பு இவ்வளவென்றும், விளை நிலம் வைத்திருக்கப்பட்டவர்கள் அவரவர் அம்சங்களைத் தெரிந்துதான் வரி செலுத்த வேண்டுமென்றும், அதற்காகக் கணக்கில்வல்ல கணக்குப் பிள்ளையை வைத்துக்கொண்டு, ஒவ்வொருவருடைய நிலத்தையும் தம்முடைய கணக்கில் குறிக்கச் சொல்லினன். மறுபடி அவரவர்கள் செலுத்தவேண்டிய பகுதிப் பணத்தைக் குறித்த தினத்திற்குள் செலுத்தவேண்டுமென்

றுங் கட்டளையிட்டான். அவனது கட்டளையை யாவரும் ஒரே மனதாய் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுள், ஒருவன் தான் அனுபவித்து வருகிற நிலத்தைக் கணக்கிற்கும் அரசனுக்குந் தெரிவிக்காமல் கள்ளத்தனமாய்ப் பயிரிட்டு சாப்பிட்டு வந்தான். அதை அரசன் ஆணைபெற்ற கணக்கர்களும் கணக்கிற் பதியவில்லை. இப்படி வெகுகாலம் நடந்துகொண்டே வந்தது. ஒருநாள் கரிகாலன் ஏதோ சந்தேகம் அடைந்தவன் போலத் தன் கணக்குப் பிள்ளைகளில் வயது சென்ற ஒருவனைப் பார்த்து, ஐயா! நீர் சென்று நம் புகார் பட்டினத்தில் ஒரு சிறிய இடமும் விடாமல் அளவிட்டு வரல்வேண்டும் என்று கட்டளையிட்டான். அதன் பிறகு அக்கணக்கன் அவ்வாறே அளந்து அறுதியிட்டுக்கொண்டு வரும்போது, களவினால் ஆண்டுகொண்டு வருபவன் நிலம் அகப்பட்டது. அதுகண்ட கணக்குப்பிள்ளை என்ன கஷ்டமாய் வந்து முடிந்தது. இச் செய்தியை அரசன் அறிந்தால் அவ்வேழையை அவதிக் குள்ளாக்கி விடுவானே! என்ன செய்வது. எப்படியாயினும் அவ்வேழையனைத் தப்புவித்து விடுவதே நல்லது என்று நினைத்து, அக்கணக்கன் நடந்ததை அரசன் அறியாமல் அடக்க முயன்றான். பின்னர், அவன் ஆண்ட நிலத்தைக் கணக்கில் கொண்டு வராமலே, நிலவளவில் பேதமேயில்லை என்று கூறிவிட்டான்.

மறுதினம் கரிகாலன் நடந்தவற்றையெல்லாம். தனது சேவகர்களால் தெரிந்துகொண்டான். பின்பு நிலம் அளந்தவனையும் அந்நிலத்தை ஆண்டவனையும் தன்னவைக்கு அழைப்பித்தான். அவர்களும் அரசன் சொல்தவருமல் சபைக்கு வந்து சேர்ந்தனர். அரசன் அவர்களைப் பார்த்து, ஹா! என்ன உங்கள் அற்புதசக்தி! இருவரும் நல்ல யோசனை செய்தீர்கள். மோசம் உங்களிடந்தான் பிறந்ததுபோலத் தோன்றுகிறது. உங்களைச் சாமான்யமாக விடக்கூடாது. கடுமையாகத்தான் தண்டிக்கவேண்டும். ஆயினும், இந்தத் தடவை மன்னித்தேன். அந்நிலத்தில் விளைந்த பொருள் இதுகாறும் நல்லவழியில் உபயோகப்பட்டு வந்ததாகத் தெரிந்தேன். இனி பாபத்தொழிலிற் புகாதீர்கள், என்று மதி கூறி விடுத்தான்.

அதுகேட்ட குற்றவாளிகள் இருவரும் பிறந்தபயன் அடைந்தவர்போல அகம்மகிழ்ந்து அப்பால் அகன்று சென்றனர்.

விரோதிகளின் தந்திரம்.

இப்படிக் கரிகாலன் அரசாட்சி காட்சியாக நடந்துவரும்போது, அவனது பகைவர்கள் ஒன்ருய்க் கூடிச் சதியாலோசனை செய்தார்கள். பின்பு அவ்வூரில் ஒரு ஆட்டிடையன் இருந்தான். அவ்விடையனுக்கு அழகில் சிறந்த ஒரு பெண்ணிருந்தாள். அப்பெண்ணை, கரிகாலன் பகைவர்கள்

பணங்கொடுத்து தமக்கு உரிமையாக்கிக் கொண்டார்கள். பின்னர், அப் பெண்ணிற்குப் பலவிதமான துற்போதனைகளைச் சொல்லிக் கொடுத்து, அவளைக் கரிகாலன் தினந்தினம் வேட்டையாடி வரும், காட்டில் திரியும்படி அனுப்பினார்கள். அவள் அவ்வாறே கானகம் எல்லாம் தனிமையாகத் திரிந்துகொண்டிருந்தாள். அவ்வாறிருக்கையில், கரிகாலன் ஒருநாள் வழக்கம்போல வேட்டையாடக் காட்டிற்கு வந்தான். அங்கு வெகுநேரம் புலி, சிங்கம், கரடி முதலிய துஷ்டமிருகங்களை வேட்டையாடிவிட்டுக் களைத்து நாட்டை நோக்கித் திரும்பிவந்துக் கொண்டிருந்தான். அப்பொழுது சூரியன் மலைவாய்ப்படுஞ் சமயமாக இருந்தது. மாலைக்காலத்துக் காற்று சோலைதோறுந் தவழ்ந்து குளிர்ச்சியாக வீசத்தொடங்கிற்று. மன்னவன் களைப்புஞ் சற்று நீங்கியது. ஆயின், அம்மன்னன் இருளிற்கு முன்பு அரண்மனைக்குப் போய்ச் சேரவேண்டுமென்கிற எண்ணத்தோடு மிகவும் வேகமாக வழிநடந்து வந்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் வரும் இடை வழியில் ஒரு பெண் தனிமையாக நிற்கக் கண்டான். பின்பு அவன் அப்பெண் சமீபத்தில் சென்று நீயாரெனக் கேட்டான். உடனே அவள் அக்கரிகாலன் எண்ணத்தைக் குறிப்பால் தெரிந்துகொண்டு, அவன் பகைவர்கள் கூறிய வார்த்தை

பலிப்பதற்கு இதுவே தக்க சமயம் என்று நினைத்து, அரசே! நான் ஒரு அரசன் புதல்வி; எங்கள் குலம் பாம்பின் வாய்ப்பட்ட தவளைபோலத் தாயத்தாரால் அலைய நேர்ந்தது; அப்பாவிகள் செய்த கொடிய தீங்கை நினைக்க நினைக்க என் மனம் பரிதபிக்கின்றது; இப்பொழுது நான் ஒரு காட்டுப்பெண், என் தகப்பன் ஒரு வீட்டிடையன், என் தாயார் ஒரு ஆடுமாக அலைய நேரிட்டது. என் பிதா ஆட்டிடையன்போல மானிடரை மேய்த்துக் காட்டரசனாக இருந்தான். அவரைப் பகைப் புலி தின்றுவிட்டது. என் தாயாரை இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பே எமன் எடுத்துப் போய் விட்டான். என்னை யார் தின்றுவிடுவார்களோ! அதை ஆண்டவன் தான் அறிவான். நான் ஒரு இடையன் மனையில் இருந்து வருகிறேன். என் கதியை உம்மிடஞ் சொல்வதினால் பயனென்ன வென்று சொல்லிக் கதறினாள்.

அம்மாதின் வார்த்தையையுந் துன்பத்தையும் நேரில் கேட்டுத் தெரிந்த கரிகாலன் மனக்கலக்க மடைந்து உடனே அப்பெண்ணைப் பார்த்து, அரிவையர் திலகமே! பயப்படவேண்டாம்; நானே உன்னைக் கலியாணஞ் செய்துக் கொள்ளு கிறேன் என்று வாக்களித்தான். பின்பு அப் பெண்ணை அவன் தனது யானையின்மேல் ஏற்றிக்கொண்டு எல்லாருங்காண அரண்மனைக்கு

வந்து சேர்ந்தான். அப்புறம் அவன் அவளைக் கலியாணஞ் செய்துக்கொண்டான். அன்றுமுதல் அவள் இராணியாய் அரச செல்வத்தை அனுபவித்து வந்தாள். அப்பெண்ணோ! தான் வந்த காரியத்தை முடிக்கக் காலம் எப்போது வருமோ வென்று எதிர்பார்த்து இருந்தாள். அவளிஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளத் தக்க சமயம் அகப்படவில்லை. அவள் மிக்க கோபத்தால் எப்பொழுதும் அரசனுடைய பந்துக்கள், சிநேகிதர்கள், மற்றும் அங்கு வரும் பெரியோர்கள் முதலியவர்களை அடிக்கடி சீறிக் கோபித்து மனம் போனவாறே தகாத வார்த்தைகளைச் சொல்லி வந்தாள்.

அதனால், அரண்மனையில் இருப்பவர்கள் எல்லாம் அக்கரிகாலன்மேல் கொஞ்சம் வெறுப்பு வைத்து வந்தார்கள். அச்செய்தியைத் தெரிந்த சோழன் மனம் எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணி எண்ணிப் புண்பட்டது. ஆயினும், அவன் தான் அடைந்திருக்கும் மனக் கஷ்டத்தைப் பிறருடன் சொல்லவில்லை. அவன் அன்று முதல் தன் மனைவியின் நடக்கையை அவன் அறியாமல் கவனித்து வந்தான். சில நாள் சென்றதும், அவனுக்குத் தன் மனைவியிடம் சந்தேகம் ஒருவாறு உண்டாயிற்று. அவன் அதைக் கவனியாதவன் போல் சமயம் பார்த்துக்கொண்டு இருந்தான்.

இப்படியிருக்க, ஒரு நாள் தன் மனைவிக்கு ஒரு தாதிப்பெண் நல்ல பசுவின் பாலைக் காய்ச்சிக் கொண்டு வந்து சாப்பிடும்படி வேண்டிக் கொண்டிருந்தாள். அதை அவள் மிகவும் அலக்ஷியமாகக் கையில் வாங்கித் தன் வாயில் ஊற்றிக்கொண்டாள். உடனே அவள் தன்தோழியைக் கோபித்து அடிபேதாய்! இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது. சீச்சீ! இந்த ஆட்டுப் பால் யாருக்குப் பிடிக்கும்; முன் பின் சாப்பிட்டிருந்தால்தானே ஆட்டின் பாலிற்கும் பசுவின் பாலிற்கும் உள்ள வித்தியாசம் ஏற்படும்! உங்கள் அரசன் அரண்மனையில் அனைவருக்கும் ஆட்டுப்பால் தான் குடிக்க அகப்படும்போல இருக்கிறது. நல்லது, நீ வந்த வழியைப் பார்த்துச் செல். இனி என்முன் நில்லாதே! எனக்கு இந்தப் பால் வேண்டாம். என்று அந்தப் பால் பாத்திரத்தைக் கோபமாய்க் கீழே கவிழ்த்து விட்டாள். உடனே அத்தோழிப் பெண் மிக்க பயத்துடன் அப்பால் வந்துவிட்டாள்.

அங்கு நடந்ததைக் கரிகாலன் ஒரு பக்கத்தில் ஒளிந்திருந்து கேட்டான். உடனே அவனுக்கு இவள் இடையன் மகளாகத்தானிருக்கவேண்டும், இல்லாவிட்டால் ஆட்டின் பாலிற்கும் பசுவின் பாலிற்கும் பேதம் எப்படித் தெரியும், இவ்விஷயத்தில் சந்தேகம் அடையக்

கூடியதாக இருக்கிறது. இனி சும்மாவிருப்பதால் பிரயோசனமில்லை. அதை நன்றாய்த் தெரிந்துக் கொள்ளுவதே நல்லது; இல்லாவிடில் தென்றல் முத்திப் பெருங்காற்று ஆகிவிடுமென்று, தனக்குள் ஆலோசனைசெய்துக் கொண்டு அப் பெண்ணின் முன்னே போய்த் தன் உடை வாளைக் கையில் எடுத்து நீர் யார்? உண்மையைக் கூறுகின்றாயா? இல்லையா? இல்லாவிட்டால் இக்கத்தியால் உன்னை எமனுலகத்திற்கு அனுப்பி விடுகிறேன் என்று கோபத்துடன் கூறினான்.

அவ்வரசன் கோபத்தைக் கண்ட பெண்மணி தேகம் நடுங்கியது. வாய்ச் சொற்கள் தடுமாறியது. கண்ணை மெரள விழித்தாள். அவள் அப்புறம் தன்னுடைய இரண்டு கையையும் தலையின்மேல் தூக்கிக்கொண்டு, அரசே! என்னை மன்னிக்கவும். இதோ எனது உண்மைப் பிறப்பையுங் குலத்தையும் சொல்லி விடுகிறேன். நானோ ஒரு ஏழை இடையன் மகள். என்னை உமது பகைவர்கள் விலை கொடுத்துவாங்கிக் கானகத்தில் திரியும்படிக் கட்டளை யிட்டார்கள். அவ்வாறே நான் அவர்கள் வார்த்தைக்கு இணங்கித் திரிந்து கொண்டு வருகையில், தம்மைக் கண்டு கலியாணஞ் செய்துக்கொண்டேன். பின்பு அவர்கள் தங்களைப் பலருக்கும் விரோதியாக்கும்படிக் கூறினர் என்று சொன்னாள்.

அவ்வார்த்தையைக் கேட்ட கரிகாலன் மனக் கஷ்டமடைந்தான். அவன் அதைப் பிறர் எவருக்குந் தெரிவிக்கவில்லை. அன்று முதல் அவன் அப்பெண்ணினிடம் மிகவும் சாக்கிரதையாக இருந்தான். அப்பெண் கூச்சலும் இருந்தவிடந் தெரியாமல் அடங்கிவிட்டது.

இவ்வாறு சில நாட்கள் சென்றன. அவ்வரண்மனையில் உள்ளவர்கள் எல்லாரும் மறுபடி அரசனிடம் முன்னிலும் நூறுபங்கு அதிகமாக அன்பு பாராட்டி வந்தார்கள். அரசனும் முன்போல் அவர்களிடம் மிகவும் பக்ஷமாய் இருந்தான். அவனுக்குப் பல மனைவியருண்டு. அவர்களில் பலருக்குப் புத்திரரு மிருந்தார்கள். ஆயினும், நாங்கூர் வேளாளர் வீட்டுப் பெண்ணிற்கு ஒரே பெண் குழந்தைதான் பிறந்தது. அதன் பெயர் ஆதிமந்தி. அது சிறு குழந்தையாய் இருக்கும்போதே அதை இரும்பிடர்த் தலையார் எடுத்துக்கொண்டு போய்த் தன் வீட்டில் வைத்து வளர்த்துக் கொண்டுவந்தார். அப்பெண் குழந்தை மிகவும் புத்திசாலியாக இருந்தது. அதன் அழகையும் அறிவையும் கொண்டாடாதவர்கள் இல்லை. அவ்விதம் மதியாற் சிறந்த ஆதிமந்திக்கு இரும்பிடர்த்தலையார் தான் கற்ற வித்தைகள் யாவையும் கற்றுக் கொடுத்தார்.

அவ்வாதிமந்தியோ கல்வியால் சிறப்படை

ந்து, சீலம், ஒழுக்கம், அடக்கம், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய இவற்ருல் யாவரும் போற்ற வளர்ந்து வந்தாள். அப்பெண்ணின் பெருமையையும், கல்வியின் சிறப்பையுங் கேள்விப் பட்ட ஆட்டணத்தி என்னும் சேரவரசன் கரிகாலன் இடம் வந்து அப்பெண்ணை யாசித்துக் கலியாணஞ்செய்துக்கொண்டான். அச்சேரன் நல்ல பலவான். நல்ல அழகுடையவன். அவனிடங் கரிகாலனுக்கு அன்பு அதிகமாயிற்று. அவன் நடனத்தில் திறமைசாலியாக இருந்தான். கரிகாலன் குமாரத்தி ஆதிமந்தி பாட்டில் கெட்டிக்காரியாக இருந்தாள். அவர்கள் இருவரும் ஒரு விதமான வருத்தமில்லாமல் மனைவாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார்கள். அதைத்தெரிந்த கரிகாலனுக்குத் தன் மருமகனிடத்தில் மிகவும் மரியாதை உண்டாயிற்று. அக் கரிகாலன் அவர்களை அடிக்கடி தன் அரண்மனைக்கு விருந்துண்ண வரவழைப்பான். அவர்களும், காவிரிப்பூம் பட்டினத்தில் வந்து சிலநாள் வேடிக்கையாகக்கழித்துச் செல்லுவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு இருக்கும்போது காவிரியில் புது வெள்ளம் வந்தது. கரிகாலன் வழக்கம்போலத் திருவிழாசெய்ய நினைத்துத் தன் பெண்ணையும் மருமகனையும் வரவழைத்தான். பின்பு யாவரும் திருவிழாக் காணவேண்டி மாயூரத்தின் கிழக்கிலுள்ள கழார் என்னும் ஊரை அடைந்தனர்.

அப்பொழுது திருவிழா நடந்துகொண் டிருந்தது. அத்திருவிழாவிற்கு வந்தவர்களில் சிலர் காவிரியில் வேடிக்கையாகத் துளைந்து விளை யாடிக்கொண் டிருந்தார்கள். பலர் கரையின்மே லிருந்து வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தார் கள். அப்படி யிருக்கையில், கூத்தனத்தித் தனது பெருமையைக் காட்டுவதற்காக அவர்களுடன் தண்ணீரில் இறங்கித் துளைந்து ஆட்டமாடிக் கொண்டிருந்தான். அவன் தண்ணீரில் நர்த் தனம் புரிவதைக் கண்டவர்களெல்லாம் சந்தோ ஷமாய்க் கொண்டாடினார்கள். அந்தச் சேரனுந் தன்னை மறந்து தண்ணீரில் விளையாடிக்கொண் டிருந்தான்.

அப்போது காவிரியாற்றில் மேல் வெள்ளம் திடீரென வந்தது. அவ்வாற்றிடையில் விளை யாடிக்கொண்டு இருந்த ஆட்டணத்தியாரின் தலை தண்ணீரில் மறைந்தது. உடனே கூத்தனத்தி யின் ஆட்டத்தின்மேல் நாட்டம் வைத்திருந்தவர் கள் கலங்கத் தொடங்கினார்கள். ஆதிமந்தியின் கண்ணீரோ பெருவெள்ளத்தில் சேர்ந்து இரு கரைகளையும் உடைக்கத் தொடங்கிற்று. தன் மகள் துக்கத்தை மாற்றுவதற்காகக் கரிகாலன், பல அரிப்புக்காரர்களைக் கொண்டு நதியின் அடிவரை யில் குடைந்து பார்க்கும் படியாகக் கட்டளையிட் டான். அவர்கள் அவ்வாறே காவிரி எல்லாம் மூழ்

கிப்பார்த்தனர். அவன் இருக்கும் இடமும், கிடைக்கும் இடமும் தெரியவில்லை. அதன் பிறகு கரிகாலன் விதியைத் தடுக்கவல்லவர்கள் யார்? என்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டான். அப்புறம் தன் அருமைப் புதல்விக்குப் பலவிதமான உலக தருமத்தை யெல்லாம் எடுத்துக் காட்டிச் சமாதானஞ்செய்ய முயன்றான்.

அவன் செய்த பிரயத்தனங்கள் ஒன்றும் பயன் படவில்லை. ஆயினும், அவன் தன் பெண்ணின் மேல் உண்டாகிய அபிமானத்தால் அவளைத் தன் நகரத்துக்கு வரும்படியாக அழைத்தான். அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவளுடைய துக்கத்திற்கு அளவேயில்லை. உடனே அவள் தன் பந்துவர்க்கங்களை விட்டுப் பிரிந்து காவிரிக்கரை ஓரமாகவே சென்று கடற்கரை அடைந்தாள். அக்கரையின் ஓரத்திலிருந்து, தன் கணவன் நாம தேயத்தைக் கூவிக்கூவி அழுது கொண்டிருந்தாள்.

முன்பு காவிரி யாற்றில் அடித்துப் போன *ஆட்டனந்தி வெள்ளத்தில் மிக்க கஷ்டப்பட்டு, தெய்வகடாக்ஷத்தால் கடற் கரையோரம் ஒதுக்கப் பட்டான். அப்பொழுது அவன் தேகம் மிகவும் மெலிந்து இருந்தது. அவனுக்குப் பேசவும் நாவெழவில்லை. இவ்வாறு துன்பப் பட்டிருக்கும்போது, மாதினி என்னும் ஒரு பெண் அவ்

*ஆட்டனத்தி என்பவரும் கூத்தனத்தி என்பவரும் ஒருவரே.

விடம் தானுக வந்து சேர்ந்தாள். அங்கு தனிமை யாகத் தண்ணீரில் திரண்டு உருண்டு இளைத் துக் களைப்புடன் கரையோரத்தில் மயக்கத்தால் விழுந்து கிடக்கும் ஆட்டனத்தியை அவள் கண் டாள். உடனே அவனைக் கிட்டி மரியாதையுடன் தன் வீட்டிற்கு அழைத்து வந்து, பின்பு அவன் வேண்டுவன எல்லாங் கொடுத்து இரக்ஷித்து வந் தாள். இப்படிச் சில தினஞ் சென்றன. ஒருநாள் மாதினி கடற்கரைக்குச் சென்ருள். அங்கே ஒரு பெண்மணி தன் கணவனைக் குறித்துக் கலங்கிக் கொண்டிருப்பதைக் காதரக் கேட்டாள். உடனே அவள் அப்பெண்ணைக் கிட்டி விசாரித்தாள். அப் பெண் சொன்னவைகளை எல்லாம் அறிந்து மாதினி, தன்னுடைய வீட்டிலிருக்கும் ஆட்டனத் தியே இவளுடைய கணவனுக விருக்கவேண்டு மென்று நிச்சயித்தாள். பிறகு அப்பெண்ணைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவள் கணவனை அவளிடம் ஒப்புவித்தாள். அப்பொழுது ஆதி மந்தி இழந்த உயிர் எழுந்ததென மகிழ்ச்சி அடை ந்து மாதினியைச் சேவித்தாள். பின்னர், அம்மா தினியினிடம் இருவரும் விடைபெற்றுக்கொண்டு தமது ஊரைநோக்கிப் புறப்பட்டனர். அவர்களுக்கு விடைகொடுத்த பின்பு ஆட்டனத்தியின் அழகில் ஆசைவைத்திருந்த மாதினி இறந்தாள். அவ்வூரை விட்டுப் புறப்பட்ட ஆதிமந்தியும் ஆட்டனந்

தியும் காவிரிப்பூம் பட்டினம் வந்து சேர்ந்த னர். அவர்கள் வரவைக்கண்ட கரிகாலன் இழந்த கண்ணைப் பெற்றவன் போலச் சந்தோஷம் அடைந்தான்.

இப்படிக் கரிகாலன் தனக்கு வந்த ஆபத்து கள் அனைத்தும் நீங்கியிருந்தான். அதைக் கண்ட, அக்கரிகாலன் பகைவர், மனஞ் சகியாமல் அவன் வாழ்வில் பொருமை அடைந்தார்கள். பின்பு அக் கரிகாலனை எவ்வாருயினும் அந்நாட்டி லிருந்து ஓடும்படியாகச் செய்யவேண்டும், அந் நாட்டை எவ்விதமாயினும் தாங்களே ஆள வேண்டும், என்று ஒருவரோ டொருவர் துரா லோசனை செய்து வந்தார்கள். அவர்கள் எண் ணம் முடிவு அடைவதற்குப் பல விதமான இடையூறுகள் இடையில் இருந்தது. அஃ தென்னை யெனின், எப்போதும் அக் கரிகால னைச்சுற்றி வலியரான இருதிறத்து வேளாளர்கள் வேலை செய்து வந்தார்கள். ஆகையால், அக்கரி காலனுடன் போர்செய்து ஜயிக்க முடியாதென்று தங்களுக்குள்ளே முடிவு செய்து, அவன் மீது வேற்றரசரைப் பகைமை ஆக்கக் கருதி, மாந்தை என்னும் ஊரை அரசாண்டுவரும் நெடுஞ் சேரலாதனிடஞ் சென்று, அவனுக்குப் பலவித மான துற்போதனை செய்து பகைமை உண்டு பண்ணினர்.

உடனே அச்சேரவரசன் தன் பகைவனுன கரிகாலன் திறமையையும் பக்கத்துணேயும் பற்றி ஆலோசித்தான். பிறகு தான் மாத்திரம் படையுடன் வந்தால் நிச்சயமாய்த் தோற்றுவிடுவோம் என்று நிச்சயித்தான். அப்பால், அச்சேரன் தனக்குத் துணேயாகப் பாண்டியனேயும் பதினெரு கூட்டத்து வேளிரையும் அழைத்துக் கொண்டு சோழ நாட்டின் மேல் படை எடுத்து வந்தான்.

அவன் வரவைத் தன் தூதரால் அறிந்தகரிகாலன் மிக்க சந்தோஷமாய்த் தன் படையைத் திரட்டிக்கொண்டு, அச்சேரன் வரும் மார்க்கமான வெண்ணி என்கிற கிராமத்தில் தயாராக காத்துக் கொண்டிருந்தான். நெடுஞ் சேரலாதனும் தன்னுடைய பெருஞ் சேனேயோடு அங்கு வந்து சேர்ந்தான். இதுவே கரிகாலன் முதற் போராகும். பின்பு இருவர் சேனேயும் கைகலந்தது. இருவர் பக்கத்திலும் சில வீரர் மடிந்தனர். அப்போது கரிகாலன் சீறி எழுஞ் சிங்கம் போலக் கோபத்தால் கொதித்துச் சத்துருக்களின் படையைச் சின்னு பின்ன மாக்கினுன். அவைகளும் அச்சோழன் அடியைத் தாங்கமாட்டாமல் தத்தளித்தன. அச் சோழனும் ஆட்டுக் கூட்டத்தில் புலி புகுந்து விளேயாடுவது போலச் சேரன் படையுள் புகுந்து கலக்கவே. அதைக் கண்ட சேரன் மனம் கொதித்தது. உடனே அச் சேரன் சோழனே நோக்கி

மிக்க வேகமாய் வந்தான். முன்னமே கோபத்தால் கொதித்து விளையாடிக்கொண்டிருக்கிற அக் கரிகாலன் தன் கையிலிருந்த கூரிய அம்பால் அவன் மார்பு பிளக்கும்படிக் குத்தினான். சேரன்உடனே மூர்ச்சித்து பூமிதேவியின் மடிமீது விழுந்தான். அது கண்டவுடன், அவனுடைய சேனைகளும், பாண்டியனும் இருந்த இடந்தெரியாமல் பறந்து மறைந்து ஓடிவிட்டார்கள். அம் முதல்நாள் போரிலேயே கரிகாலன் தனது துணைவர்கள் எல்லாரும் போற்ற வாகை மாலை சூடிக் கொண்டான்.

இவ்வாறு ஆத்திமாலை சூடி அகங்கரித்திருந்த கரிகாலன் வெற்றியைக் கேட்ட, அவன் பகைவர் மனம்வெதும்பிற்று. அக் கரிகாலன் புலிக் கொடியைக் கண்ட அரசர்கள் மனம் நடுங்கின. அப்படிக் கரிகாலன் பகைவர்கள் மனம் நொந்து கடைசியாகத் தாங்களே அவன் மீது படை எடுப்பதாக நினைத்தார்கள். மறுபடி, அசாத்தியம் என்று ஒருவரோடொருவர் ஆலோசனை செய்து கொண்டு படை சேர்க்கத் துணிந்தனர். அதன் பிறகு தமக்குத் துணையாகும்படி, ஒளியர், அருவா வடதலையார், இடையர், ஐம்பெரு வேளிர் முதலியவர்களிடம் போய்க் கேட்டுக் கொண்டார்கள். அச் செய்தியைக் கரிகாலன் தனது தூதுவர் மூலமாய்த் தெரிந்தான் உடனே. அவன், அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து வருவதற்கு

முன்பே ஒவ்வொருவரையும் அடக்க வேண்டு மென்று எண்ணினான். அதற்குள், அவனது பகைவர்கள் ஒவ்வொருவராக ஒரூரில் சேர்ந்துக் கொண்டிருந்தனர். அக் கரிகாலன் உடனே அவ் வூரைச் சுற்றிக்கொண்டான். அதனால் பகைவர் களின் படைகள் ஒன்று சேர்ந்து எதிர்க்க முடியா மற் போயிற்று. உடனே அவனுடைய பகைவர்கள் பயந்து ஓடி மகத நாட்டு அரசன் இடம் போய்ச் சரண் புகுந்தார்கள். அம் மகத நாட்டரசன் கரிகாலனுக்கு முன்னமே விரோதியானவன். ஆயின், கரிகாலனுக்குத் தன் பகைவரை முதிர விட இஷ்டமில்லை. கடன் சேஷமும் பகை சேஷமும் கூடாதென்றே அவன் மனம் எண்ணிற்று. உடனே அவன் தன் பகைவருடன் சேர்ந்த பகைவரை ஒவ்வொருவராக வாயினும் வெற்றி கொள்ளுவதே தகுதி என்று நினைத்துத், தொண்டை நாட்டில் புகுந்தான். அங்கிருந்த அருவா வடதலையாரை எதிர்த்துப் போர் செய்தான். அவர்கள் அக் கரிகாலன் போரில் தோற்று அவனுக்கு அடிமையானார்கள். உடனே அவன் அவர்கள் ஆண்டிருந்த ஊர்களை இருபத்து நான்கு பகுதியாக்கி, அவைகளைத் தன் கீழ்ப்பட்ட வேளாளருக்குக் கொடுத்துக் குடி ஏற்றினான். பின்பு, அக் கரிகாலன் அந் நாட்டின் இராஜதானியான காஞ்சி புரத்திற் பிரவேசித்தான். அங்கு சில நாளிருந்து காமக்

கோட்டத் திருப்பணி செய்து வழிபட்டான். அப்பொழுது அக்கோவிலைக் காவல் செய்துகொண்டிருக்குஞ் சாத்தனர் அக் கரிகாலன் திருப்பணிக்குச் சந்தோஷம் அடைந்து, தம் கையில் இருந்த செண்டு என்னும் ஆயுதத்தை அன்புடன் அவனிடம் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்ட அக்கரிகாற் பெருவளத்தான் ஒளியர் நாட்டிற்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்த ஒளியர்களை எல்லாம் தன் வல்லமையால் அடக்கினன். அப்புறம், அவன் தன் படைத்தலைவரையும் வேளிர்களையும் அருவாளர்களையும் ஒன்ருகச் சேர்த்து, காமூரில் அரசு புரியுங் கழுவுள் என்னும் ஆயர்குல அரசனைப் பணியும்படிச் செய்து வாருங்கள் என்று கட்டளை யிட்டான். அவர்கள் அவ்வாறே முடித்து வந்தார்கள். அதன் பிறகு பிடவூர், வல்லம் என்னும் கிராமங்களுக்குச் சென்ருன். அங்கு அடிக்கடி குறும்பு செய்து, வரும் ஐம்பெரு வேளிர்களை அடக்கினன்.

இவ்விதம் போரில் வல்லவனன கரிகாலன் நல்ல நாள் பார்த்துத் தன்னுடைய வாள், குடை, வீரமுரசு இவைகளை எடுத்துக்கொண்டு, இருபுறமும் படைகள் புடை சூழ்ந்துவர தமிழ் நாட்டின வடவெல்லையான வேங்கடத்தை அடைந்தான். அங்கு வாழ்ந்த வடுகவரசர்களுடன் போர் தொ

டங்கி, அவர்களை அத்தேசத்திலிருந்து ஓடிவிடச் செய்தான்.

பின்னர், அச் சோழர்குலக் காளை அருவா நாட்டிற்கு வடது பக்கத்தில் இருக்கும் மலையமா னுட்டை அடைந்தான். அந் நாட்டின் தலை நக ராக விருந்தது திருக்கோவலூர். அதனை ஆளு பவன் மலையமான். அவன் சோழர்களின் சிற்ற ரசன். அவன் ஒரு போதும் சோழர்களின் வார்த் தையை மீறி நடந்ததே கிடையாது. ஆகையால், அம் மன்னனுடன் போர் புரியாமல் அந் நாட்டை விட்டு அகன்றான்.

அங்ஙனம் சென்ற கரிகால் வளவன் பன்றி நாட்டைக் கண்டான். அப் பன்றி நாடானது நாகைப் பட்டினத்தைத் தலை நகரமாகக் கொண் டது. அது பாண்டிய நாட்டிற்கு வடதிசையில் இருப்பது. அதில் முன்னம் எயினர் என்னும் சாதியார் வசித்து வந்தனர். அந்த எயினரில் இரண்டு பிரிவுண்டு. அவர்களில் ஒருவர் நாகர். மற்றொருவர் ஒளியர் என்று சொல்லுகின்றனர். அவர்களில் முற்கூறிய நாகர் தான் அரச உரிமை பெற்றவர்கள். அந்நாகர்களை பழைய சரிதங்களில் ஒளிநாகர் என்றும் அடைமொழி கொடுத்துக் கூறு வர். அவ்விரு கூட்டத்தாரையும் வலிகுறையும்படி உயுத்தம் செய்து அடக்கினான். அவ்விடத்தி லிருந்து புறப்பட்டுத் தென்பாண்டிய நாட்டை

அடைந்தான். அது இரண்டு பகுதியாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றைத் திருநெல் வேலி என்றும், மற்றொன்றை மதுரை என்றுங் கூறுவார்கள். அப் பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை. அதை ஆண்டவர்கள் பாண்டியர்கள். அப்பாண்டியனைச் சண்டை செய்து வெற்றி அடைந்தான். அவ்விடத்திலிருந்து பூழி நாட்டை அடைந்தான். அப் பூழி நாடு கொச்சி, திருவாங் கூர், பாலக்காடு, தென்மலையாளம், வடமலையாளம் என ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள், திருவாங்கூர் தவிர மற்றவைகள் அர பிக்கடல் ஓரத்தில் வரிசையாக இருக்கின்றன. அங்குச் சென்று சேரவரசர்களை வெற்றி அடைந் தான். பிறகு முல்லை நிலத்திற்குரிய இடையர்களைச் சின்னபின்னப் படுத்தி, இருந்தவிடந் தெரியாமல் அழித்தான். அப்பால் இளங்கோவேள் முத லியவர்களைக் கொன்றான். அவ்வாறு அநேக அரசர்கள் அடிபணிய மகா வீரனாக விளங்கி இருந்தான்.

அப்பால், சில நாள் வரையில் கரிகாலன் போர் செய்யாமல் சும்மா விருந்தான். ஆயினும், அவனுக்குப் போர் செய்யும் அவா குறையவில்லை. இந்தத் தமிழ்த் தேயத்திலும் அக் கரிகாலனுடன் போர் செய்ய வருபவர்கள் ஒருவரும் இல்லை. மறு படியும், அக் கரிகாலன் வடதிசையை நோக்கி

யுத்தம் செய்ய வெகு தூரத்திற்கப்பால் சென்முன். அப்போது அவனுக் கெதிரில் இமயமலை தடைப் பட்டது. அதனுல் அவன் மிக்க கோபம் கொண்டு தன் கையிலிருந்த செண்டு என்னும் ஆயுதத்தால் அம்மலையை எறிந்தான். பிறகு அம்மலை அவனுக்கு வழிவிட்டது.

அதன் பிறகு, கரிகாலன் சோணை ஆற்றின் கரையின் ஒருபக்கத்தில் இருக்கும் வச்சிர நாட்டை அடைந்து, அந் நாட்டு மன்னனுல் அளிக்கப் பட்ட முத்து விதானத்தைப் பெற்றுக்கொண்டு மகத நாட்டினுள் புகுந்தான். அஃதறிந்த அந் நாட்டு வேந்தன் தன் பகைமை நீக்கிக் கொள்ளக் கருதி அவனுக்குப் பட்டி மண்டபத்தைக் கொடுத்தான். அதனைப் பெற்றுக்கொண்டு அவன் அவந்தி நகரை அடைந்தான். அந் நாட்டிறைவன் கரிகாலனுக்கு மிக்க சிநேகிதன். ஆகையால் அவன் வரவைச் சந்தோஷமாய் ஏற்று, பலவித உபசார வார்த்தைகள் சொல்லி விருந்திட்டான். பிறகு ஒரு வாசலில் கட்டும் தோரணத்தை வெகுமதியாகக் கொடுத்து விடை அளித்தான்.

இவ்வகை, ஆரிய மன்னர்கள் கொடுத்த மிக்க வெகுமதிகளைக் கொண்டு சென்று, தன்னூர் அடைந்து சிலநாள் சௌக்கியமாக விருந்தான். மறுபடியும், அவன் மனம் முன் போலவே சண்டை செய்ய நினைந்தது. உடனே அக் கரிகா

லன் அலை கடலைக் கடந்து இலங்கை மேல் போருக்குச் சென்றான்.

அப்போது அவ்விலங்கை நகரை அரசாண்டு கொண்டிருந்தவன் முதற்கயபாகுக்கு முற்பட்ட ஒரு சிங்கள குலத்தரசன். அவனைப் பகைத்து ஊயுத்தஞ் செய்து, அந் நாட்டில் இருந்து பன்னி ரண்டாயிரம் குடிகளைக் கொண்டுவந்து, அவர்க ளைச் சிறைப்படுத்தினான். அவன் அரசாட்சி உலக மெல்லாம் சூரியன் ஒளிபோலப் பரவிற்று. பின் னர், தன்னுடு வந்து சேர்ந்தனன். இவன் காலத் தில் தான் சோழ இராஜ்யம் இமய முதல் குமரியின் காறும் பரந்து மகோன்னத நிலையில் இருந்தது.

அக் கரிகாலன் அரசாட்சியில், நகரமக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஜனப் பிரதிநிதிகளாகிய மகா ஜனங்களும், மத சம்பந்தமான சடங்குகளை நிறைவேற்ற வல்ல குருக்களாகிய அந்தணர்களும், குடிகளும், அரசரும் சுகமடையச் செய்யும் மருத்து வரும், நன்னிமித்தம் கூறும் நிமித்தகரும், அரசர்க்கு உறுதி, நீதி முதலியன சொல்லும் அமைச்சரும், அரசிறைப் பொருளின் வரவு செல வுகளைக் கவனிப் போரும், எப்பொழுதுங் கூடி இருப்பர். அரசன் தானே எல்லாக் காரியங்களையும் செய்தற்குப் பெரிதும் உரிமை உடையன் எனி னும், இவ் ஐம்பெருங் கூட்டத்தாரோடு ஆலோ

சித்தும், நல்ல புலவரைத் துணை கொண்டும் அரசியல் நடத்தி வந்தான்.

அக் கரிகாலன் காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் பலவகைப்பட்ட கோயில்கள் இருந்தன. பல அமண பள்ளிகள் இருந்தன. பௌத்தமடங்கள் பல இருந்தன. இவைகள் ஒவ்வொன்றும் இடையூறு இல்லாமல் விளக்கமுற்று இருந்தது. அம் மன்னன் தன் கீழ்வாழும் குடிகள் ஒவ்வொருவரும் மனதிற்கு இனிய சமய நெறியைச் சார்ந்து ஒழுகும் உரிமையை அளித்திருந்தனன்.

இன்னும், அக் கரிகாலன் கீழ் அயல் தேசத்துக் குடிகள் மருவூர்ப் பாகத்தில் வியாபாரத்திற்காக வந்து குடிபுகுந்தனர். அவர்களுள் சோனகர், சாவகர் முதலியவர்கள் வெளி நாட்டிலிருந்து வந்துசேர்ந்தவர்கள். அவர்களுடன் உள் நாட்டு மக்கள் ஒரு சிறிதும் பகைமை இல்லாமல் வாய்மையாய் நடந்து வந்தனர்.

இவ்விதம், அவன் தருமம் தவறுமல் அரசு நடத்தி வந்தமையால், குடிகள் மிகவும் அபிவிருத்தியடைந்தனர். குடிகள் அதிகரிக்கவே அந் நாட்டில் வசிப்பதற்கு இடம் போதாதாயிற்று. உடனே அக் கரிகாலன் காடுகளை எல்லாம் அழித்தான். அக் காடுகள் இருந்த இடம் எல்லாம் வீடுகள் ஆக்கி விட்டான். நீர் நிலைகள் பல வெட்

---

* 104. அசோகன் கல்வெட்டுச் சாஸனம் 11-ம் × 111-ம்.

டினன். நாட்டில் பல விதமான வளங்களும் உண் டாகும்படிச் செய்தான். அப்புறம் தன்னுட்டிற்கு நாற்புறமும் மதிள்கள் கட்டினன். அம்மதிளேச் சுற்றிப் பல குடிகளேக் காவலாக வைத்தான்.

இப்படித் தன்னுட்டிற்குக் கரிகாலன் பலவித நலங்களேச் செய்துவந்தான். அதன் பின்பு, அவன் காவிரியின் வெள்ளத்தால் சம்பவிக்கும் கஷ்டத் தை மாற்றுதற்கு வழிதேடினன். அப்பால், அந்நதி யின் இரண்டு பக்கத்திலும் கரை அமைப்பது அல் லால் வேறு வழி இல்லேஎன்று தனக்குள்ளே தீர்மா னித்தான். அப்பொழுதே, அவன் அந்நதி எந் தெந்த ஊர்களின் வழியாகச் செல்லுகின்றதோ அந்தந்த ஊர்களின் தலேவருக் கெல்லாம் கரை கட்டவேண்டியது என்று கட்டளேயிட்டான். பிறகு அவரவர்களுக்கு உரியபங்கையும் அளந்து விட் டான். இப்படி அளந்து கொடுத்தவர்களில் மூன்று கண்ணேயுடைய பிரதாபருத்திரன் என்று பெயர்பெற்றவரசன் ஒருவன் இருந்தான். அப்பிர தாபன் மிகவும் அகங்காரத்துடன் அவன் ஆணே யைச் செய்ய மறுத்துக் கரைகட்ட வாராமல் இருந் தான். அதனே அறிந்த அமைச்சர்கள்; அப் பிரதா பன் செய்கையை அரசனுக்குத் தெரிவித்தனர்.

உடனே கரிகாலன் புன்னகை செய்து, அம் மன்னன் உருவத்தைப் படத்தில் எழுதிவரும் படி அவர்களுக்கு கட்டளே யிட்டான். அரசன் கட்

டளைப் பிரகாரம் அவர்கள் படத்தில் அப் பிரதாபன் உருவத்தை எழுதிவந்து, அவன் முன்பு வைத்தனர். அதனைக் கரிகாலன் செவ்வையாய்ப் பார்த்து நெற்றியில் கண்ணிருக்கக் கண்டு, இக் கண்ணல்லவோ இவனை அகங்காரப் படச் செய்தது என்று நினைத்து, அக் கண்ணை வேலாற் குத்தினன். உடனே அப் பிரதாபன் கண் மறைந்தது. அதைத் தெரிந்த பிரதாபன், மிக்க பயமடைந்தான். பின்பு காவிரிக் கரையை மற்றவரைப்போலத் தானும் கட்ட வந்தான், இப்படி அரசர்கள் எல்லாம் அக் கரிகாலன் ஆணையால் கட்டி முடித்தார்கள். பின்பு சோழன். பற்பல கால்வாய்களையும் மதகுகளையும் வெட்டிக் கட்டினன். இதனல் தான் வளவன் என்ற பெயரும் அக் கரிகாலனுக்குக் கொடுக்கப்பட்டது. அன்று முதல் சோழ குலத்தாருக்கே வளவர் என்னும் சொல் பட்டப் பெயராயிற்று.

அப்பால், சில காலம் தன் நாட்டின் வளத்தைக் கண்டு சந்தோஷமடைந்தான். பிறகு, அக் கரிகாலன் வியாபாரத்தை விருத்தியாக்கும் வழியை எண்ணினன். அவன் இராஜதானியாகிய காவிரிப்பூம் பட்டினம் கடலுக்குச் சமீபத்தில் இருந்ததால், அதைத் துறை முகப்பட்டின மாக்கினன். அது, சீகாழியில் இருந்து சுமார் பதினன்கு மையில் தூரம் இருக்கிறது. அந் நகருக்கு காகந்தி,

சம்பாதி, கமாரம், கபேரிஸ், புகார் என்றும் வேறு பெயர்கள் கூறுவர்.

அப் பட்டினத்திற்கு இடையில் காவிரி ஆறு ஓடுகிறது. அக் காவிரியாறு இப்பொழுது போல் முன்பு பிரிவுகள் இல்லை. ஆகையால் மிகவும் விசாலமும் ஆழமுமாக விருந்தது. அதில், முன்னம் கப்பல்கள் போகவரச் சௌகரியமாக விருந்தது. அதன் வடது பக்கத்தில் காவிரிப்பூம் பட்டினம் இருந்தது. அதைத்தான் பட்டினப்பாக்கம் என்றும் மருவூர்ப்பாக்கம் என்றும் இரண்டு பாகமாகப் பிரித்திருந்தது. அதில், மருவூர்பாக்கமே வியாபாரஞ் செய்வதற்குச் சௌகரியமாக விருந்தது.

அந்த இரண்டு பாக்கங்களில், பட்டினப் பாக்கத்தில் அரசர் வீதி, கடைவீதி, வணிகர் வீதி, அந்தணர் வீதி, முதலியவைகள் இருந்தன. மருவூர்ப் பாக்கத்தில், கலங்கரை விளக்கம், ஆயத்துறை, பண்டசாலைகள், கிடங்குகள், உயர்ந்த மேடைகள் முதலியவைகள் கடற்கரை ஓரமாகக் கட்டப்பட்டிருந்தன. அக்கடற்கரையில் சீனர், யவனர், சாவகர், முதலிய வியாபாரிகளின் வீடுகள் இருந்தது. மற்றும், பல வியாபாரிகள் அங்கு குவிந்து இருந்தனர். இந்த பாக்கத்தின் பக்கங்களில் பர்மாவிலிருந்து வந்த குதிரை வியாபாரிகளும், மலைநாடுகளிலிருந்து வந்த மிளகு வியாபாரிகளும், இம

யம். மேடு முதலிய மலையில் இருந்துவந்த மாணிக்கம், பொன் முதலிய விற்கும் வியாபாரிகளும் பொதிய மலையிலிருந்து வந்த, சந்தனம், அகில் முதலியன விற்கும் வியாபாரிகளும் எப்போதுங் கூட்டங் கூட்டமாக வந்து வியாபாரஞ் செய்து கொண்டிருப்பர். அங்கு ஏற்றுமதி இறக்குமதிகள் இடைவிடாது நடைபெற்று வந்தது. அங்கே சுங்கம் வாங்கும் சாலைகள் இருந்தன. ஒவ்வொன்றின் பேரிலும் அரசன் முத்திரையாகிய புலி இலச்சினை போடப்பட்டிருக்கும். இத்தகையவற்றை யெல்லாம் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்னமேசோழர்கள் நன்ருய்த்தெரிந்திருந்தார் என்பது மிகவும் பராட்டத்தக்கதாம். அக் கரிகாலன் நாட்டினை வளப்பஞ் செய்யுந் திறமையும், நகரைச் சீர்திருத்திச் செல்வத்தை விருத்தியடையச் செய்த பெருமையும், பல சங்க நூல்களில் காணலாம். அதுவும் அல்லாமல் அவன் நாகரீகமும் நன்ருய்த் தெரிந்தவன் என்று விளங்குகிறது.

இச் சோழன் தன் மாமன் இரும்பிடர் தலையாரின் துணை கொண்டு பல கல்விக் கழகங்களையும் உண்டாக்கினுன். அன்றித் தானும் கல்வி கேள்விகளில் சிறந்தவனுக விருந்தான். அவன் தன்னிடம் வரும் புலவர்களை நன்ருய் ஆதரித்து வந்தான். அக் கரிகாலன் மதம், குலம் பார்ப்பது

இல்லை. ஆண் பெண் இருவருக்கும் பேதமில்லா மல் கல்வி பயிற்று வித்தான். கல்விதான் அபி விருத்திக்கு முக்கியமென்று எண்ணி, செல்வத் தைச் சிறிதும் எதிர் பாராமல் செலவு செய்து வந்தான். இவன் காலத்தில் பரணர் நக்கீரர், மாமூ லர், உருத்திரங் கண்ணனூர், முடத்தாமக் கண்ணி யார், கருங்குழலாதனூர். கழாத்தலையார் முதலிய ஆண் புலவரும், ஆதிமந்தி, வெள்ளி வீதியார். வெண்ணிக் குயத்தியார், குறமகள் இளவெயினி, குறுமகள் குறியெயினி, காவற் பெண்டு, முதலிய பல பெண் புலமை முற்றியவர்களும் தமிழ் பாஷையை அலங்கரித்து வந்தார்கள். இவன் அரசாட்சியில் பல பாடகர்கள் இருந்தனர்.

இவ்வளவு பெருமையுடன் அரசாட்சி செய்த கரிகாலன் அல்லும் பகலும் இடைவிடாது பரம் பர பிதாவான பரம சிவனையே பக்தி பண்ணிக் கொண்டிருப்பான். இவனே தமிழகம் முழுவதும் தன்னடி பணிய ஆண்டு வந்தவன் என்பர்.

முற்றிற்று.

உட்பொருள் விளக்கம்.

சோழர்களின் :—இராஜதானிகள்.

1. கருவூர், உறையூர், தஞ்சை, திருவாரூர், காஞ்சி.

கோழிநகர்:—முற்காலத்து, ஓர் கோழி, நிலமுக்கியத்தால் யானையுடன் போர்புரிந்து அதனைப் போர்தொலைத்ததால் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி என்பது பெயராயிற்று.

கரிகாலன்:—இவன் முன்னம் பகைவர்கள் கொளுத்திய சிறையின் மதிலைத் தாண்டிவந்தபோது இவன் காலில் நெருப்புப் பட்டது. அதனால் இப்பெயர் பெற்றான் என்று கூறுவர்.

நாங்கூர் :—(சீர்காழி தாலூகாவில் இருக்கிறது.)

கழார்:—என்பது மாயூரத்திற்கு கிழக்கில் உள்ளது. இதனை முன்னம் (மதநி) ஆண்டான்.

வெண்ணி.—தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள கோவில் வெண்ணி என்று கொள்ளலாம்.

கோட்டங்கள்:—(1) ஆமூர், (2) இளங்காடு, (3) ஈக்காடு, (4) ஈத்தூர், (5) ஊற்றுக்காடு, (6) எயில், (7) கடிகை, (8) கடிகை, (9) களத்தூர், (10) குன்றபத்திரம், (11) சிறுகரை, (12) செங்காடு, (13) செந்திருக்கை, (14) செம்பூர், (15) தாமல், (16) படுவூர், (17) பல்குன்றம், (18) புலால், (19) பேயூர், (20) மணவூர், (21) வெண்குன்றம், (22) புலியூர், (23) வேங்கடம், (24) வேலூர்.

அருவாவடதலை நாடு:—South Arcot District.

வேங்கடம் :—Modern Tirupathi, North Arcot.

நாகை :—Nagapatam.

சோணை (Son) வண்டல் கண்டு நகரை அடுத்து உற்பத்தியாகி பாட்டணாவுக்கருகில் கங்கையில் கலக்கும் உபநதி.

ஜனப்பிரதிநிதி :—Representatives.

குருக்கள் :—Priests.

மருத்துவர் :—Doctors.

நிமித்தகர் :—Astrologers.

அமைச்சர் :—Ministers.

கலங்கரை விளக்கம் :—Light house.

ஆயத்துறை :—Custom house.

பண்டசாலை —Ware house.

கிடங்கு :—Godowns.

உயர்ந்தமேடை :—Docks and Piers.

4 கரிகாலன். திருஞானசம்பந்தர் கூறியது. இக்கரிகால் வளவனே. (திருஞான சம்பந்தர் காலம். 8-ம் நூற்றுண்டு). 4-வது கரிகாலன். கி. பி. 1070—1117-வதில் ஆண்டவனென்றும், இது 3 வது கரிகாலன் கி. பி. 1060—1070, 2-வதில் ஆண்டவனென்றும், இது பத்தாவது நூற்றுண்டு முதற் கரிகாலன் காலம். கி. மு. முதலாவது என்றுங் கூறுவர்.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.